**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**C.C. 79 /2023 Date : 07.08.2025 P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அழகப்பன் | ஆதார் எண் | |
| தந்தை பெயர்; | கிருஷ்ணன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | கிளாப்பாளையம் | வயது | 37 |
| எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எதிரியை எனக்கு எப்படி பழக்கம் என்றால் நான் B.Ed., படிப்பதால் முக்கியமான வினாக்களை எதிரி குறித்து தருவார் என்ற வகையில் எனக்கு பழக்கம். எதிரி எனக்கு நான் B.Ed., படிப்பதால் முக்கியமான வினாக்களை எதிரி குறித்து தருவார் என்ற வகையில் எனக்கு பழக்கம் என்பதை எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. 2013 ம் ஆண்டு முதல் எதிரி எனக்கு பழக்கம் என்பதை எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2013 ல் எதிரி ஆசிரியராக எங்கு பணிபுரிந்தார் என்றால் சேந்தநாடு, அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார். அப்போது தான் எதிரியை நான் முதன்முதலாக சந்தித்தேன். மேற்சொன்ன விசயத்தையும் எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. சேந்தநாடு பள்ளியிலிருந்து எப்பொழுது பணிமாறுதலாகி எதிரி சென்றார் என்றால் எனக்கு தெரியாது. 2013 க்கு பிறகு எதிரியை நான் எப்பொழுது சந்தித்தேன் என்றால், இவ்வழக்கு காசோலையை எதிரி எனக்கு கொடுக்கும் போது சந்தித்தேன். எதிரி எதற்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் அவசர தேவைக்காக என்று மட்டுமே சொன்னார்.

4. எதிரி என்னிடம் பணம் பெறும் போது வியாபார செலவிற்கா அல்லது குடும்ப விழாவிற்கா என்று குறிப்பிட்டு சொல்லி பணம் பெற்றாரா என்றால் இல்லை, அவசர தேவைக்காக என்று மட்டுமே சொன்னார். ம.சா.ஆ.1 காசோலையில் தேதி குறிப்பிடும்

பெட்டியில் 1 என்பதும், 20 என்பதும் வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் எதிரி கொடுத்த காசோலையை அப்படியே வங்கியில் செலுத்தினேன்.

5. எதிரி செல்வமுருகனை யார் அறிமுகப்படுத்தினார்கள் என்றால் ராயப்பன், குன்னப்பன் ஆகியோர் அறிமுகப்படுத்தி வைத்தனர். இந்த விசயத்தையும் நான் தற்பொழுது தான் சொல்கிறேன் என்றால் சரிதான். எதிரி கொடுத்த காசோலையை வங்கியில் செலுத்துவதற்கு முன்பு எதிரியின் வங்கிக் கணக்கில் ஏதேனும் பணபரிமாற்றங்கள் நடைபெற்றதா என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

6. நான் எதிரிக்கு பணம் கொடுக்கும் சமயத்தில் G-Pay, Phone-Pay, ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு பணம் செலுத்தும் வசதிகள் இருக்கிறது என்பது எனக்கு தெரியும். ஆனால் நான் எதிரிக்கு தொகையை ரொக்கமாக தான் கொடுத்தேன். காசோலையை எதிரி எங்கு கொடுத்தார் என்றால், உளுந்தூர்பேட்டை, பேருந்து நிலையத்திற்கு என்னை வரசொல்லி கொடுத்தார். இந்த விசயத்தை எனது புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

7. எதிரியுடன் ஏகாம்பரம் என்ற ஆசிரியர் பணிபுரிந்தாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஏகாம்பரம் என்ற ஆசிரியர் மூலமாக தான் எதிரியை எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. எதிரி, ஏகாம்பரம் என்பவரிடம் தான் இவ்வழக்கு காசோலையை கொடுத்திருந்தார் என்றாலும், எதிரிக்கும், ஏகாம்பரத்திற்கும் தான் பணபரிவர்த்தனை இருந்தது என்றாலும், எனக்கும் எதிரிக்கும் எந்தவித பணபரிவர்த்தனையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8. நான் ஆசிரியர் பணிக்கான தேர்வை எழுதினேனா என்றால் ஆமாம். எதிரி ஆசிரியர் தேர்வுக்கான முக்கியமான வினாக்களை எனக்கு தொகுத்து, தயாரித்து தருவதற்கு தொகை ஏதும் பெற்றாரா என்றால் இல்லை. 2013 ம் ஆண்டு தேர்வுக்கான வினாக்களை எதிரி எனக்கு தயாரித்து கொடுத்தார். தற்பொழுது எனக்கு கரூர்வைசியா, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கனரா வங்கி மற்றும் இந்தியன் வங்கியில் கணக்கு உள்ளது.

9. எனக்கு உள்ள மேற்சொன்ன 4 வங்கிகளில் வேறு நபர்களுக்கு எவ்வளவு தொகை பணபரிமாற்றம் செய்துள்ளேன் என்றால் தற்பொழுது ரூ.5 இலட்சம் பணபரிமாற்றம் செய்துள்ளேன். 2013 ம் ஆண்டில் யாருக்கும் நான் பணபரிமாற்றம் செய்யவில்லை. நான் எதிரிக்கு பணம் கொடுப்பதற்கு ஈடாக எந்த ஆவணத்தையும் பெறவில்லை. எதனடிப்படையில் நான் எதிரிக்கு பணம் எந்த ஆவணமும் நான் பெறாமல்

கொடுத்தேன் என்றால், எதிரி ஆசிரியர் என்ற முறையில் நான் பணம் கொடுத்தேன்.

10. 2022 ம் ஆண்டில் எதிரி சேந்தநாட்டில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். 06-11-2022 ல் நான் எதிரியை சந்திக்கவில்லை என்றால் சந்தித்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் செக்யூரிட்டி பெற்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் பெயர் சுப்பிரமணி. எதிரி, ஏகாம்பரம் என்ற ஆசிரியரிடம் ரூ.1 இலட்சம் கடனாக பெற்றதற்கு ஈடாக ஒரு வெற்று காசோலையும், வெற்று புரோநோட்டும் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

11. இறந்து போன ஏகாம்பரம் என்பவரிடமிருந்து வெற்று காசோலையை எடுத்துவந்து, இந்த வழக்கை நானும், வெற்று புரோநோட்டை எனது அண்ணன் எடுத்துவந்து ஓ.எஸ்.8/2023 வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி, ஏகாம்பரத்துடன் 2019 ல் செய்துகொண்ட பரிவர்த்தனையின் போது தான் இவ்வழக்கு காசோலை மற்றும் புரோநோட்டு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

12. எதிரிக்கும், ஏகாம்பரத்துக்கும் தான் பணபரிவர்த்தனை நடைபெற்றது என்றாலும், எனக்கும், எதிரிக்கும் பணபரிவர்த்தனை நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஏகாம்பரம் எனது நண்பர் என்பதால் அவர் இறந்தபிறகு அவரது காசோலையை நான் பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2019 வருடத்திய காசோலையை நான் 2022 என திருத்தம் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. ஏகாம்பரம் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. ஏகாம்பரம் என்பவர் எனது நண்பர் அவர் மூலமாக அரசு ஆசிரியர் பணிக்காக ரூ.5 இலட்சம் வங்கி மூலமாக வேறு நபருக்கு நான் அனுப்பிவிட்டு, திரும்ப வாங்க முடியாது என்பதால் ஏகாம்பரத்திடமிருந்து காசோலையை பெற்று எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. கடன் கொடுப்பதற்கு எனக்கு எந்த உரிமமும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்லும் தேதியில் எதிரி, காசோலை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2022 ஆம் வருடம் எதிரி சேந்தநாட்டில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், ஏகாம்பரமும் 2019 ல் காசோலை வழக்கு தாக்கல் செய்யப் போவதாக எதிரியை மிரட்டியதால் எதிரி 2019 ம் வருடமே இவ்வழக்கு காசோலைக்கு Stop Payment கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

15. அதன்பிறகு நான் காசோலையின் 2019 ம் வருடத்தை 2022 என்று திருத்தம் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2013 ம்

வருடத்தில் நான் எதிரியை சந்திக்கவில்லை என்று சொன்னாலும், எதிரிக்கும், எனக்கும் எந்த பணபரிமாற்றமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

(S/d.V.Gomathi)
Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by P. Parameswari